17-12-2016

தி இந்து
தமிழால் இணைவோம்

## வன விலங்குகளால் ஏற்படும் உயிரிழப்பு, சேதங்களுக்கான இழப்பீட்டு தொகை உயர்வு

தமிழகத்தில் வன விலங்குகளால் ஏற்படும் மனித உயிரிழப்பு, சேதங்களுக்கான இழப்பீட்டுத் தொகை உயர்த்தப்பட்டுள்ளது. அதேசமயம் பயிர்கள், தென்னை சேதத்துக்கான இழப்பீட்டுத் தொகை மதிப்பில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை.

தமிழகத்தில் சுமார் 22,877 சதுர கி.மீ. பரப்பளவுக்கு வனப்பகுதிகள் அமைந்துள்ளன. இதனை 26,345 சதுர கி.மீ. பரப்பளவுக்கு விரிவு படுத்தும் பணிகள் தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வனத்தில் வசிக்கும் யானைகள், காட்டெ ருமை உள்ளிட்ட வன விலங்குகள் உணவு, நீர் ஆதாரங்களுக்காக வனத்தில் இருந்து வெளியேறி, குடியிருப்பு பகுதிகளுக்குள் புகுந்து விடுகின்றன.

இதுபோன்ற சமயங்களில் வனம் மற்றும் அதை ஒட்டிய பகுதிகளிலும் வசிக்கக்கூடிய மக்களின் வீடுகள், பொருட்கள், விவசாய பயிர்கள் வன விலங்குகளால் சேதப்படுத்தப் படுகிறது. மேலும், மனிதர்களுக்கு காயம் ஏற்படுவதுடன், உயிரிழப்பும் ஏற்படுகின்றன.

இவ்வாறு பாதிக்கப்படுவோ ருக்கு அரசு சார்பில் வழங்கப்பட்டு வரும் இழப்பீட்டுத் தொகையை, மாநிலப் பேரிடர் நிவாரண நிதி விதிமுறைகளுக்கு இணையாக உயர்த்தி வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்து வந்தனர். இதை ஏற்று, வனவிலங் குகளால் ஏற்படும் சேதங்களுக்கான இழப்பீட்டுத் தொகையை உயர்த்தி, தமிழக அரசு தற்போது அரசாணை வெளியிட்டுள்ளது.

இதன்படி, வன விலங்குகள் தாக்கி மனிதர்கள் உயிரிழக்க நேரிட்டால் அதற்கான இழப்பீட்டுத் தொகை ரூ.3 லட்சத்திலிருந்து ரூ.4 லட்சமாகவும், படுகாயம் அடைவோருக்கான தொகை ரூ.30 ஆயிரத்திலிருந்து ரூ.59,100 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

அதேபோல கான்கிரீட், ஓட்டு வீடுகள் முழுவதும் பாதிக்கப் பட்டாலோ அல்லது கடும் சேதம் அடைந்தாலோ தலா ரூ.95,100, குடிசை வீடுகள் முழுவதும் பாதிக்கப்பட்டால் ரூ.10 ஆயிரம், கடுமையாக சேதமடைந்தால் ரூ.5 ஆயிரம் வழங்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம், பயிர்கள் சேதம டைந்தால் ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம், ஒரு தென்னை மரத்துக்கான இழப்பீட்டுத் தொகை ரூ.500 என்பதில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை.

இதுமட்டுமின்றி, (பழைய இழப்பீட்டுத் தொகை அடைப்புக் குறிக்குள்) கறவை மாட்டுக்கு ரூ.30 ஆயிரம் (ரூ.10,000), காளை மாட்டுக்கு ரூ.25 ஆயிரம் (ரூ.10,000), வெள்ளாட்டுக்கு ரூ.3 ஆயிரம் (ரூ.2000), செம்மறி ஆட்டுக்கு ரூ.3 ஆயிரம் (ரூ.1,500), கோழிக்கு ரூ.100 (ரூ.100), பன்றிக்கு ரூ.3 ஆயிரம் (ரூ.1000) என இழப்பீட்டுத் தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சேதமடையும் வீட்டு உபயோகப் பொருட்களுக்கு ரூ.2 ஆயிரம், வாகனங்களுக்கு ரூ.2 ஆயிரம், கடைகளுக்கு ரூ.4 ஆயிரம், குடிநீர் கிணறு, மின்மோட்டாருக்கு ரூ.2 ஆயிரம் என பழைய மதிப்பீடே தற்போதும் தொடர்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆய்வுக்குப் பின்னர்…

இதுகுறித்து வனத்துறை அதிகாரிகள் கூறும்போது, “கடந்த 21.7.2016 அன்று தாக்கல் செய்யப்பட்ட தமிழக பட்ஜெட்டின் போது, வன விலங்குகள் தாக்குதலால் ஏற்படும் மனித உயிரிழப்பு, காயம், பயிர்சேதம், கால்நடை மற்றும் சொத்துகளின் சேதங்களுக்கான இழப்பீட்டு தொகை அதிகரித்து தரப்படும் என அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து, முதன்மை தலைமை வன பாதுகாவலர் மேற்பார்வையிலான குழுவினர் இழப்பீட்டு தொகை மதிப்பீடு குறித்து ஆய்வு மேற்கொண்டு தமிழக அரசுக்கு பரிந்துரை செய்தனர். அதனடிப்படையில் தற்போது இதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது" என்றனர்.

## பாரம்பரிய கட்டிச்சம்பா நெல்லை மதிப்பு கூட்டி விற்கும் தம்பதியர்: அதிக லாபம் கிடைப்பதாக பெருமிதம்

கட்டிச்சம்பா அரிசி. (அடுத்த படம்) மதிப்பு கூட்டிய அவல், அரிசியுடன் ஸ்ரீகிருஷ்ணபெருமாள், முத்தம்மை தம்பதியினர்.

பாரம்பரிய, மருத்துவ குணம் நிறைந்த நெல் ரகங்களான கட்டிச் சம்பா, கொச்சி சம்பா ரகங்களை சாகுபடி செய்து, அதை மதிப்பு கூட்டி சந்தைப்படுத்தி வரும் விவசாயத் தம்பதியினர் பலரது கவனத்தை ஈர்த்துள்ளனர்.

கன்னியாகுமரி மாவட்டம், புத்தளத்தை சேர்ந்த விவசாயி ஸ்ரீகிருஷ்ணபெருமாள் (59). இவரது மனைவி முத்தம்மை ஓய்வு பெற்ற பள்ளி ஆசிரியை. தங்கள் சாதனை குறித்து `தி இந்து'விடம், ஸ்ரீகிருஷ்ண பெருமாள் கூறியதாவது:

மொத்தமாக 6 ஏக்கரில் நெல் சாகுபடி செய்கிறேன். 3 ஆண்டுகளுக்கு முன் வரை முழுக்க ரசாயன விவசாயம் தான். வீட்டுத் தேவைக்கு

மட்டும் 50 சென்ட்டில் பாரம்பரிய கட்டிச் சம்பா ரகத்தை, இயற்கை முறையில் சாகுபடி செய்வேன்.

**கட்டுக்குள் சர்க்கரை நோய்**

இயற்கையில் விளைந்த கட்டிச்சம்பா அரிசியை திருநெல்வேலியில் உள்ள சகோதரிக்கு கொடுத்து அனுப்பினேன். சர்க்கரை நோயாளியான அவரது ரத்த சர்க்கரை அளவு குறைந்திருந்தது. இதைப்பார்த்து அதிசயித்த மருத்துவர், அவரது சாப்பாட்டு முறைகளை கேட்டுள்ளார். சர்க்கரை நோய் கட்டுக்குள் இருப்பதற்கு பாரம்பரிய ரகமான கட்டிச் சம்பா அரிசியே காரணம் என, மருத்துவர் கூறியுள்ளார். தொடர்ந்து அவரே, என்னிடம் கட்டிச்சம்பா நெல்லை வாங்கி, தன்னிடம் வரும் நோயாளிகளுக்கு கொடுத்தார். அதன் பின்னர் தான் பாரம்பரியத்தின் பெருமை எனக்குத் தெரிந்தது.

படிப்படியாக ரசாயன விவசாயத்தை குறைத்து விட்டு, பாரம்பரிய இயற்கை வழி வேளாண்மையில் நெல் சாகுபடிப் பரப்பை அதிகரித்தேன். இப்போது முதல் போகத்தில் கட்டிச் சம்பாவும், இரண்டாம் போகத்தில் கொச்சி சம்பா ரகமும் சாகுபடி செய்தேன்.

**அவலாக்கி விற்பனை**

நெல் அறுவடை செய்ததும் அப்படியே விற்காமல், அரிசியாகவும், அவலாகவும் மதிப்பு கூட்டி சந்தைப்படுத்துகிறேன். விதைத்தவனே விலை வைப்பது, பாரம்பரிய, இயற்கை வழி சாகுபடியில் மட்டுமே சாத்தியமாகிறது.

நான்கரை ஏக்கரில் ரசாயன விவசாய நெல் உற்பத்தியில் கிடைக்கும் லாபத்தை விட, ஒன்றரை ஏக்கரில் இயற்கை முறை விவசாயத்தில் கூடுதல் வருவாய் கிடைக்கிறது. என் வீட்டிலேயே ஆடு, மாடு, கோழி என கால்நடைகள் இருப்பதால் அதன் கழிவுகளையே இயற்கை உரமாக போடுகிறேன்.

குமரி மாவட்டத்தின் பாரம்பரிய ரகங்களான கட்டிச்சம்பா, கொச்சி சம்பா ஆகியவை சாகுபடி செய்வது இப்போது அரிதாகி வருவதால், விதை உற்பத்தி செய்து, நண்பர்களுக்கு விநியோகித்து வருகிறேன். நாகர்கோவில் அருகே திருப்பதிசாரம் அரசு நெல் ஆராய்ச்சி நிலைய அதிகாரிகளும், இந்த பாரம்பரிய நெல் நாற்றுக்களை வாங்கிச் சென்றுள்ளனர்" என்றார் அவர்.

## கம்பு, சோளம், தினையில் கலக்கலாம்



கம்பு, சோளம், தினை ஆகியவை கதிர் முற்றிய பருவத்தில் பால் திரண்டிருக்கும். அவை மணியாகக் காய்வதற்கு முன் மேற்படி கதிர்களைப் பறித்து உள்ளங்கையில் வைத்து நிமிண்டினால் உமி கழன்று தானிய மணிகளில் பால் தெறிக்கும்.

முத்துபோல ஒளிரும் இந்தத் தானிய முத்துகளை வாயிலிட்டுச் சவைத்தால், பால் பொங்கி உதடுகளில் நுரைத்துவரும். தானியங்கள் பால் புரதமும், எரிமமும், நுண் சத்துகளும், உயிர்ச் சத்துகளும் நிரம்பியவை.

விவசாயக் குடும்பங்களில் தானியக் கதிர் அறுப்புக் காலத்துக்கு முன்பு நீள நீளமான தண்டுகளுடன் கதிர்களை அறுத்துவந்து, சுள்ளி கூட்டி நெருப்பு படர விடுவார்கள்.

கதிர்களின் சொங்கில் தொற்றிய நெருப்புப் பொறி அமாவாசை இருட்டில் மின்மினிப் பூச்சிகளைப் போலப் பறந்து மறையும். நெருப்பில் வாட்டிய கதிர்களை, முறத்தில் நிமிண்டி, இளம் கருகல் வாசத்துடன் மணிகளை உதிர்த்துக் கையால் அள்ளிப் பிள்ளைகளுக்குக் கொடுப்பார்கள். அதன் இயற்கையான சுவைக்கு எட்டாத தொலைவில் நிற்பவை, இன்றைய பொட்டலத் தயாரிப்புப் பண்டங்கள்.

### மயிலிறகால் வருடும் சுவை

வாட்டியெடுத்த தானியக் கதிர் மணிகள் சுவையானவை மட்டுமல்ல சத்தானவையும்கூட. நாவின் சுவை மொட்டுகளின் மீது சவுக்கால் அடிப்பது போலச் சுளீர் சுளீர் எனத் தாக்குதல் தொடுக்கும் செயற்கை சுவை அனைத்தும், நாவின் இயல்புணர்வை மரத்துப் போகச் செய்யக்கூடியவை.

ஒரு பட்டாம்பூச்சி பூவில் அமர்வதைப் போன்று மென்மையான சுவையை மட்டுமே, தொடர்ந்து ஏற்றுவந்தோம் என்றால் நமது உடலில் நோய் உருவாவதற்கான வாய்ப்பே இல்லை. சுளீர் சுளீரென்று நாவைத் தாக்கும் சுவையை ஏற்றுப் பழகிவிட்டால், சுவையின் சுருதியை மேலும் மேலும் கூட்டிக்கொண்டே போக நேரிடும். சுவையின் வீரியத்தைக் கூட்டக் கூட்ட, ஒரு கட்டத்தில் நமது சுவையுணர்வு எந்த அளவுக்கும் நிறைவடையாமல் போய்விடும். அந்த நிலையை அடைவதற்கு முன்னர், உடல் அனைத்து விதமான நோய்களின் களமாக மாறிவிட்டிருக்கும்.

### சூரிய மணிகள்

முற்றிய தானிய மணிகளில் திரண்ட பால் வெயிலில் காயக் காயப் பாறைபோல உறைந்து விடும். நம்முடைய சிறுதானியப் பயிர்கள் குறைவான நீரை உண்டு வளர்பவை. தானிய மணிகள் வெயிலைச்

செரித்து விளைபவை. எனவே, தானிய மணிகள் ஒவ்வொன்றும் `சூரியக் குஞ்சுகள்' என்றே சொல்லலாம். அந்த அளவுக்கு ஆற்றலைத் தம்முள் திணித்து வைத்திருப்பவை.

காய்வதற்கு முன் இளம் இனிப்பு, துவர்ப்பு, மென் உப்பு எனப் பல்சுவைகளும் அடங்கிய பாலாக இருக்கும் தானிய மணிகள், காய்ந்த பிறகு வெயிலில் தூரத்துக் குயிலின் பாடலோசை போன்று, இதமான கசப்புச் சுவையைத் தம்மில் ஏற்றி வைத்திருக்கும்.

**உடனடி ஊட்டம்**

நமது பாரம்பரியத் தானியங்களான கேழ்வரகு, கம்பு, சோளம், தினை போன்றவற்றை நீரில் பத்து மணி நேரம் ஊறவைத்து, இருபத்தி நான்கு மணி நேரத்துக்கு முளை கட்ட வைத்தால், அவை உயிர் பெறுகையில் மீண்டும் பால் கட்டத் தொடங்கும். இந்த நிலையில் ஆட்டிப் பால் எடுத்து, உடன் சர்க்கரைப் பாகும் நெய்யும் சேர்த்து அல்வா போலக் கிண்டி இனிப்பு செய்யலாம்.

இந்த இனிப்பில் மாவின் பிசுபிசுப்புத் தன்மை இருக்காது என்பதால், ஓரிரு நாட்களுக்கு வைத்திருந்து சாப்பிட இசைவாக இருக்காது. தானியப் பண்டத்தைச் சமைத்தவுடனேயே சாப்பிட்டு முடித்து விடுவது நல்லது. ஆனால், இந்த இனிப்பு உடலுக்கு மிகுந்த ஊட்டத்தை அளிக்கும்.

நீண்ட நாட்கள் நோய்வாய்ப்பட்டு மீண்டவர்கள் உடனடியாக ஊட்டம் பெற இத்தகைய இனிப்பைக் கொடுப்பது விவசாயக் குடும்பங்களில் வழக்கம்.

**திணற வேண்டாம்**

தானியங்கள் என்றதும் கூழ், களி அதிகபட்சம் தோசைக்கு மேலாக வேறு புதிய பதார்த்தங்கள் எதையும் நாம் முயற்சித்துப் பார்ப்பதில்லை. சிறுதானியம் பற்றி அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பேசப்படுவதைக் கேட்டு, சூப்பர் மார்க்கெட் அடுக்கில் பாக்கெட்டைப் பார்த்ததும்

ஆர்வமாக வாங்கி வந்துவிடுகிறார்கள். ஆனால் என்ன செய்வதென்று தெரியாமலோ அல்லது `எதற்குச் சோதனை முயற்சி?' என்று சோம்பியோ வண்டு பிடிக்க விட்டு விடுகிறார்கள். இது சிறுதானியங்களுக்கு இழைக்கப்படுகிற அவமானம்.

**விதவிதமான தின்பண்டங்கள்**

கம்பு, சோளம் ஆகியவற்றைத் தனித்தனியாகவோ அல்லது சம அளவில் கலந்தோ அரை மணி நேரம் ஊறவிட்டு நீரை வடித்துவிட்டு, நீர் முற்றிலும் உலரும் வண்ணம் ஃபேனுக்குக் கீழ் துணியில் ஆற விட்டு மிக்ஸியில் போட்டு உடைத்துக்கொள்ள வேண்டும். ரவைப் பதத்துக்கு உடைத்த தானியத்தைக் கஞ்சியாகக் காய்ச்சலாம். அன்றலர்ந்த மலர் போன்ற இந்தக் கஞ்சி, இட்லி தோசையைப் போல மந்தத் தன்மையை ஏற்படுத்தாமல் வயிற்றில் இதமாக இறங்கும். இதற்குத் தொட்டுக்கொள்ளத் துவையலோ, முட்டைப் பொடிமாஸோ பொருத்தமாக இருக்கும்.

அல்லது இதே தானிய ரவையை லேசாக எண்ணெயோ, நெய்யோ விட்டு வறுத்து உப்புமாவாகவும் கிளறலாம். கம்பு, சோளம் தவிர்த்துக் குதிரைவாலி, தினை, சாமை, வரகு ஆகிய சிறு தானியங்களை நேரடியாகக் கஞ்சியாகக் காய்ச்சலாம் அல்லது உப்புமா கிளறலாம். பாசிப் பருப்பு போட்டு அரிசிக்குப் பதிலாகச் சிறுதானியப் பொங்கல் செய்யலாம்.

**வயிற்றுக்கு இதம்**

சமையலில் மரபான செய்முறைக்குச் சற்று மாறுபட்டு யோசித்தால் போதும். படைப்புத் திறன் மிகுந்த விதவிதமான பதார்த்தங்களை நம்மால் தயாரிக்க முடியும்.

தினையை ஒன்றுக்கு நாலு பங்கு நீர் விட்டுக் குழைய வேகவைத்து, தேங்காய்ப் பூவைத் தூவி, ஏலக்காயை நுணுக்கிப் போட்டு, வெல்லம் தட்டிப் போட்டு ஒரு கிண்டு கிண்டி இறக்கினால் குடிக்கக் குடிக்கத் திகட்டாத பாயசம் தயார். இந்தப் பாயசத்தை ஒரு நேர உணவாக

எடுக்கப் பழகிக்கொண்டால் வயிறு தொடர்பான பல நீண்ட கால உபாதைகளுக்கு உடனடி தீர்வு கிடைக்கும்.

அரிசி மாவுக்குப் பதிலாகத் தினைமாவில் கொழுக்கட்டை செய்து பிள்ளைகளுக்கு சுவை காட்டினால் போதும். வாரந்தோறும் விநாயகர் சதுர்த்தி கொண்டாடச் சொல்வார்கள்.

**பனியாகக் கரையும்**

விதவிதமாகச் சுவைக்க விரும்பும் பருவத்தில் இருக்கும் பிள்ளைகள் கையில் கவர்ச்சியும் சுவையும் கொண்ட ஆரோக்கியமான பண்டங்களைத் தராமல், ஆபத்து நிறைந்த வணிக நொறுவைப் பாக்கெட்டுகளை அவர்களிடமிருந்து பறிக்க முடியாது.

ஆறில் ஒரு பங்கு உளுந்தும் மீதி ஐந்து பங்கு தினையும் போட்டு, சிறிய குடும்பம் என்றால் மிக்ஸியிலேயே அரைத்து, அரை மணி நேரம் புளிக்கச் செய்து தோசை சுட்டு பாருங்கள். நெய் ஊற்றாமலே இளம் பொன்னிறத்தில் மொறுமொறுவென்று உருப்பெறும் தினை தோசை, நம் குழந்தைகள் நாவில் பனியாகக் கரைந்து உருகும்.

மேலும் சில சுவை மிகுந்த தானியப் பலகாரங்களை எளிய முறையில் செய்வது பற்றி அடுத்த வாரமும் பார்க்கலாம்.

தினமணி

**மஞ்சள் விலை தொடர்ந்து உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி**



ஈரோடு சந்தையில் மஞ்சள் விலை தொடர்ந்து உயர்ந்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

ஈரோட்டில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தின் கட்டுப்பாட்டில் உள்ள செம்மாம்பாளையம் தனியார் மஞ்சள் சந்தை, கோபி கூட்டுறவுச் சங்கம், ஈரோடு கூட்டுறவுச் சங்கம், பெருந்துறையில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் ஆகியவற்றில் வாரந்தோறும் திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை மஞ்சள் ஏலம் நடைபெற்று வருகிறது.

மேலும், விவசாயிகளை மட்டுமே உறுப்பினர்களாகக் கொண்ட உழவன் உற்பத்தியாளர் நிறுவனத்திலும் மஞ்சள் ஏலம் நடக்கிறது. ஈரோடு மட்டுமின்றி தருமபுரி, கிருஷ்ணகிரி, வேலூர், திருச்சி, பெரம்பலூர், தேனி, திருப்பூர், கரூர் உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் இச்சந்தை மூலமாக தங்களது மஞ்சளை விற்பனை செய்து வருகின்றனர்.

தமிழகம் மட்டுமின்றி கர்நாடகம், ஆந்திரம், கேரள மாநிலங்களைச் சேர்ந்த வியாபாரிகள் இச்சந்தைக்கு நேரடியாக வந்து மஞ்சளைக் கொள்முதல் செய்கின்றனர். ஈரோடு சந்தையில் கடந்த 6 மாதங்களுக்கும் மேலாக ஒரு குவிண்டால் மஞ்சள் ரூ. 8,000 என்ற விலையிலேயே இருந்து வந்தது.

இந்நிலையில், டிசம்பர் 14-ஆம் தேதி முதல் ரூ. 9,000-யை தாண்டியுள்ளது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ரூபாய் நோட்டு பிரச்னையால் இச்சந்தையில் பல கோடி மதிப்புள்ள

மஞ்சள் தேக்கம் அடைந்துள்ள நிலையில், மாவட்ட நிர்வாகத்தின் துரித நடவடிக்கையால் இப்போது விவசாயிகளுக்கு காசோலை வழங்கப்படுகிறது.

இம்மாத இறுதி அல்லது ஜனவரி தொடக்கத்தில் புது மஞ்சள் விற்பனைக்கு வரும். இந்நிலையில், மஞ்சள் விலை ரூ. 9,000-யை தாண்டியுள்ளது விவசாயிகளிடம் வரவேற்பைப் பெற்றுள்ளது.

**ராமநாதபுரம் மாவட்டத்தில் 1.19 லட்சம் ஹெக்டேரில் நெல் சாகுபடி**



ராமநாதபுரம் மாவட்டத்தில் 1,19,886 ஹெக்டேர் பரப்பளவில் நெல் பயிரிடப்பட்டிருப்பதாக வெள்ளிக்கிழமை நடந்த விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் எஸ்.நடராஜன் தெரிவித்தார். ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக ஊராட்சி மன்ற கூட்ட அரங்கில் ஆட்சியர் எஸ்.நடராஜன் தலைமையில் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட வருவாய் அதிகாரி மு.அலிஅக்பர், வேளாண்மை இணை இயக்குநர் என்.அரிவாசன்,நபார்டு வங்கியின் உதவிப் பொதுமேலாளர் மதியழகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வேளாண்மை)வெள்ளைச்சாமி வரவேற்றார். கூட்டத்தில் ஆட்சியர் மேலும் பேசியது: ராமநாதபுரம் மாவட்டத்தில் சராசரியாக 334.60 மி.மீ.மழையும், வடகிழக்குப் பருவமழை சராசரியாக

458 மி.மீ.யும் பெய்யலாம் என எதிர்பார்க்கப்பட்டது. இதில் 162.71 மி.மீட்டர் அதாவது 21 சதவிகித மழை மட்டுமே பதிவாகியுள்ளது. மாவட்ட அளவில் 1,19,886 ஹெக்டேர் பரப்பளவில் நெல்சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இவற்றில் பிரதமர் பயிர்க்காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 1,09,109 ஹெக்டர் காப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாக நடப்பு ஆண்டில் இம்மாதம் 14 ஆம் தேதி வரை 6194 விவசாயிகளுக்கு ரூ.16.76 கோடி மதிப்பில் பயிர்க்கடன்கள் வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு தேவையான உரவகைகளும் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் 2131 பண்ணைக்குட்டைகள் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 1743 மனுக்கள் வரப்பெற்றதில் 1340 பண்ணைக்குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன என்றார். கூட்டத்தில் அரசு அலுவலர்கள், விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள், விவசாயிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள் பலரும் போதுமான மழையின்றி பாதிக்கப்பட்டிருப்பதாக கவலை தெரிவித்தனர். மழையில்லை என்றாலும் விவசாயிகள் நலன் பாதுகாக்கப்படும் என ஆட்சியர் பதிலளித்தார்.

**விவசாயிகளுக்கான வானிலை: செல்லிடப்பேசியில் குறுந்தகவல்**

வானிலை தொடர்பான அறிவிப்புகளை விவசாயிகளின் செல்லிடப்பேசிக்கு குறுஞ்செய்தியாக அனுப்பும் புதிய சேவையை இந்திய வானிலை ஆய்வு மையம் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்திய வானிலை ஆய்வு மையத்தின் விவசாய வானிலை பிரிவு மற்றும் வேளாண் துறையின் பிரிவான புவி அறிவியல் துறையும் இணைந்து இந்தச் சேவையை அறிமுகப்படுத்தியுள்ளன. இதன்படி, தமிழக விவசாயிகள் சென்னை வானிலை ஆய்வு மையத்தின் ஜ்ஜ்ஜ்.ண்ம்க்ஞ்ீட்ங்ய்ஹண்.ஞ்ர்ஸ்.ண்ய் என்ற இணையதளத்தில் சென்று தங்களின் 10 இலக்க செல்லிடப்பேசி எண்களைப் பதிவு செய்ய வேண்டும். மேலும் அதில் எந்த மாநிலம் மற்றும் மாவட்டத்தைச் சேர்ந்தவர், என்னென்ன பயிர்கள் பயிரிடுவார்

(ஒருவர் 5 பயிர்கள் வரை குறிப்பிடலாம்) என்பதையும் பதிவு செய்ய வேண்டும். மேலும் தங்களுக்கான மொழியையும் தேர்வு செய்ய வேண்டும். ஆங்கிலம், தமிழ், ஹிந்தி, மலையாளம் உள்ளிட்ட 12 மொழிகளில் இந்தச் சேவை அளிக்கப்பட உள்ளது. இந்த இணையதளத்தில் சென்று ஒரு விவசாயி பதிவு செய்துவிட்டால், அவருக்கு விவசாயம் தொடர்பான வானிலை முன்னறிவிப்புகள் செல்லிடப்பேசியில் குறுஞ்செய்தியாக அனுப்பப்படும். அந்த விவசாயி பதிவு செய்த குறிப்பிட்ட பயிர்களுக்கான பிரத்யேக வானிலை முன்னறிவிப்பும் வாரம் ஒரு முறை அனுப்பப்படும். விவசாயிகளுக்கு ஏதேனும் வானிலை முன்னெச்சரிக்கை இருந்தாலும் அதுவும் செல்லிடப்பேசிக்கு குறுந்தகவல் அனுப்பப்படும் என்று வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

தினகரன்

## தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி கூட்டம்

பெரும்புதூர், : பெரும்புதூர் ஒன்றியம் மதுரமங்கலம் கிராமத்தில் தொடக்க வேளாண்மை கூட்டறவு கடன் சங்கம் செயல்பட்டு வருகிறது. இதன் இயக்குனர்கள் குழு கூட்டம் நேற்றுமுன்தினம் வங்கியில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சங்க தலைவர் (பொறுப்பு) மணவாளன் தலைமை தாங்கினார். கூட்டத்தில் விவசாயிகளுக்கு பலகோடி ரூபாய் விவசாய கடன்களை தள்ளுபடி செய்தும், வெள்ள சேதத்தின் போதும் விவசாயிகளுக்கு வெள்ள நிவாரண நிதியுதவி வழங்கியும், வட்டியில்லா பயிற்கடன் வழங்கிய முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மறைவிற்கு இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் தொடக்க வேளாண்மை கூட்டறவு கடன் சங்கத்தின் இயக்குனர்கள் கோபாலகிருஷ்ணன், சம்பூர்ணம்பாலு, சிங்கிலிப்பாடி ராமசந்திரன், சிவா, தேவி,

வேளாங்கண்ணி, ஏழுமலை, அருள்ராஜ் மற்றுன் அலுவலக ஊழியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## விவசாயிகளை காப்பாற்ற நடவடிக்கை

திருப்பூர்,: இயற்கை பொய்த்துப் போய் கடும் வறட்சி தாக்கி வருவதால் விவசாயத்தையும், விவசாயிகளையும் காக்க மாநில அரசு உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் என திருப்பூரில் நடந்த விவசாயிகளின் குறைதீர் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் மாவட்ட கலெக்டர் ஜெயந்தி தலைமையில் நேற்று நடைபெற்றது. இதில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலாளர் மதுசூதனன் பேசியதாவது: மத்திய அரசின் நடவடிக்கை விவசாயிகளை பத்து ஆண்டுகள் பின்னுக்குத் தள்ளிவிட்டது. ரூ.50 ஆயிரம் மதிப்புள்ள மாடு ரூ.20 ஆயிரத்துக்கு விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. அன்றாட விவசாயப் பணி செய்வதா, வங்கிக்குச் சென்று பணம் எடுப்பதா எனத் தெரியவில்லை. விவசாயிகளுக்கு கூட்டுறவு சங்க கடன் தருவதற்கு தமிழக அரசு வரவேற்கத்தக்க நடவடிக்கை எடுத்தாலும் விவசாயிகள் அங்கு சென்று பணம் பெற முடிவதில்லை. எதுவுமே செய்ய முடியாமல் விவசாயிகள் பெரும் பாதிப்பைச் சந்திக்கின்றனர். வறட்சி மாவட்டமாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன? வசாயிகளுக்குப் பயனுள்ள கூட்டமாக இக்கூட்டத்தை நடத்த வேண்டும் என்று அவர் கூறினார்.

அதேபோல் அகில இந்திய விவசாயத் தொழிலாளர் சங்க மாவட்டச் செயலாளர் பஞ்சலிங்கம் கூட்டத்தில் பேசுகையில், வறட்சி பாதித்த மாவட்டமாக திருப்பூரை

அறிவித்து, வேலை இழந்துள்ள கிராமப்புற விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு ரூ.5 ஆயிரம் இழப்பீடு, வருமானமில்லா அவர்கள் குடும்பத்திற்கு 30 கிலோ அரிசி வழங்க வேண்டும், நூறு நாள் வேலை திட்ட சம்பள பாக்கி பல மாதங்களாக நிலுவையில் வைக்கப்பட்டுள்ளதை உடனடியாக வழங்க வேண்டும், நூறு நாள் வேலை திட்டத்தை 150 நாட்களாக கூடுதல் படுத்த வேண்டும், மாவட்டத்தில் உள்ள அனைத்து பேரூராட்சிப் பகுதிகளிலும் கிராமப்புற வேலை உறுதித் திட்டத்தை விரிவுபடுத்தி வேலையில்லாத விவசாய கூலித் தொழிலாளர்களுக்கு வேலை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தினார். விவசாயி மனோகரன்: மத்திய அரசின் பணமதிப்பு நீக்க நடவடிக்கையால் விவசாய தொழிலாளர்களுக்கு கூலி தரமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அணிக்கடவு வங்கியில் முறைகேட்டில் ஈடுபட்ட வங்கி அலுவலர்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். உடுமலை, மடத்துக்குளம், தாராபுரம், பெதப்பம்பட்டி ஆகிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் கொப்பரை ஏலம் நடைபெறுவதில்லை.

காளிமுத்து: திருப்பூர் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும். உப்பாறு பகுதியில் குடிக்கக்கூடத் தண்ணீர் இல்லை. எனவே உயிர்த்தண்ணீர் விட வேண்டும். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு, கால்நடைத்தீவனங்களை வெளிமாநிலங்களில் இருந்து இறக்குமதி செய்து, தட்டுப்பாட்டை போக்கவும், குண்டடம் நான்குசாலை சந்திப்பில் அரசு மற்றும் தனியார் பேருந்துகள் நிறுத்தி பயணிகளை ஏற்றிச் செல்லவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

நல்லசாமி: காவிரி நதிநீர் பிரச்சனையில் மாதாந்திரப் பங்கீட்டு முறையை மாற்றி, தினசரி

நீர்ப் பங்கீட்டு முறையை அமலாக்க மாநில அரசு மறுசீராய்வு மனுத் தாக்கல் செய்ய வேண்டும்.ராஜாமணி: திருப்பூர் மாவட்டம் கடும் வறட்சியை சந்தித்துள்ளது. அவிநாசி-அத்திக்கடவு திட்டம் எந்த நிலையில் உள்ளது என்பதை விளக்க வேண்டும். ஈஸ்வரமூர்த்தி: திருப்பூர் மாவட்டத்தில் வடகிழக்கு, தென்மேற்கு பருவமழையும் பொய்த்துவிட்டது. தாராபுரம் பகுதியில் மக்காச்சோளம் பயிரிட்டவர்கள் அறுவடை செய்யமுடியாமல் தவித்து வருகின்றனர். ஆகவே, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 25ஆயிரம் இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தாராபுரம் புளியவலசு கூட்டுறவு சங்கத்தில் கடந்த 12 வாரங்களாக பால் கொள்முதல் பணம் ஆவின் சார்பில் வழங்கப்படவில்லை. இதனால் பலர் தனியாரை நாடிச் செல்லும் சூழல் ஏற்பட்டுள்ளது. சின்னச்சாமி: திருப்பூர் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும். கால்நடைத் தீவனங்கள் தட்டுப்பாட்டை போக்க போதிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.இதையடுத்து மாவட்ட கலெக்டர் ஜெயந்தி, மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

## போதிய மழை இல்லை; தண்ணீரையும் திறக்கவில்லை பல ஆயிரம் ஏக்கர் பயிர்கள் கருகியது

புவனகிரி, : காவிரி டெல்டா பாசனத்தின் கடைமடை பகுதியாக விளங்குவது புவனகிரி மற்றும் சிதம்பரம் தாலுகா பகுதிகள். சுமார் 44 ஆயிரம் ஏக்கர் விளை நிலங்கள் இப்பகுதியில் உள்ள வீராணம் ஏரியில் இருந்து பாசனம் பெறுகிறது. காவிரி, மேட்டூர், கல்லணை, கீழணை போன்றவற்றில் இருந்து போதிய தண்ணீர் திறக்கப்படாததால், இப்பகுதி பாசனத்தின் நீர் ஆதாரமான வீராணம் ஏரிக்கு தண்ணீர் வரவில்லை. அதனால் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு பாசனத்திற்காக ஏரியில் இருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை. இதனால் விவசாயம் அழிந்து விட்டதாக குற்றம் சாட்டுகின்றனர்

பரங்கிப்பேட்டை மற்றும் புவனகிரி பகுதி விவசாயிகள். வழக்கமாக தென்மேற்கு பருவ மழை, வட கிழக்கு பருவ மழை மற்றும் வீராணம் ஏரியில் இருந்து திறக்கப்படும் தண்ணீர் ஆகியவற்றால் இப்பகுதிகளில் விவசாயம் செழிக்கும். ஆனால் இந்த ஆண்டு தென்மேற்கு பருவ மழை விவசாயிகளை ஏமாற்றிட, வட கிழக்கு பருவ மழையும் கை கொடுக்கவில்லை. இந்த நேரத்தில் விவசாயிகள், தங்களின் ஒரே நீர் ஆதாரமாக நம்பி இருந்த வீராணம் ஏரி தண்ணீரும் கிடைக்கவில்லை.

மனம் தளராத விவசாயிகள் தண்ணீரை காசு கொடுத்து வாங்கி விவசாய பணிகளை மேற்கொண்டிருந்தனர். ஆனால் அதன் பின்னரும் மழை பெய்யவில்லை. இதனால் தண்ணீர் இல்லாமல் பயிர்கள் காய்ந்து கருக துவங்கியது. பரங்கிப்பேட்டை அருகே உள்ள தீர்த்தாம்பாளையம், கணக்கன்பாளையம், பு.முட்லூர், அரியகோஷ்டி, அகரம், புவனகிரி அருகே உள்ள வடக்குத்திட்டை, தெற்குத்திட்டை, மேலமணக்குடி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் பல ஆயிரம் ஏக்கர் நிலங்களில் நெற்பயிர்கள் காய்ந்து விட்டது. கீரப்பாளையம் ஒன்றியத்தில் உள்ள கண்ணங்குடி, எண்ணநகரம், சாக்காங்குடி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களும் வறட்சிக்கு தப்பவில்லை. இதனால் அதிர்ச்சியில் விவசாயிகள் செய்வதறியாது திகைத்து உள்ளனர்.

வயலில் காய்ந்து கருகி உள்ள பயிர்களை வைத்து எதையும் செய்ய முடியாது என்பதால் வேறு வழியின்றி மனிதர்களுக்கு கிடைக்காத நெல், மாட்டுக்காவது உணவாக கிடைக்கட்டும் என நினைத்து கனத்த இதயத்துடன் விவசாயிகள் வயல்களில் மாடுகளை விட்டு மேய்த்து வருகின்றனர். இதனால் நிலமும் சுத்தமாகும் என்பது இப்பகுதி விவசாயிகளின் எண்ணமாக உள்ளது.

நேரடி விதை விதைத்த வயல், நாற்று பிடுங்கி நட்ட வயல், நாற்றங்கால் என வஞ்சனை இல்லாமல் எல்லா வயல்களும் காய்ந்து கருகியதால் விரக்தியின் விளிம்பில்

இருக்கின்றனர் இப்பகுதி விவசாயிகள்.

வயல்களில் பயிர்களை கால்நடைகள் மேயும் அளவிற்கு ஏற்பட்டுள்ள வறட்சியால் இந்த ஆண்டு விவசாயம் பொய்த்து போனது. அதனால் இந்த ஆண்டு உணவு தானிய உற்பத்தி கணிசமாக குறையும் என வேளாண் வல்லுநர்கள் கணக்கிட்டுள்ளனர். இந்நிலையில் வறட்சிக்கு அரசு நிவாரணம் தருமா என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். நெற்பயிர்களுக்கு காப்பீடு செய்துள்ள விவசாயிகள் முழு அளவில் காப்பீடு கிடைக்குமா என ஆராய துவங்கி உள்ளனர். காப்பீடு திட்டத்தின்கீழ் பயிர்களுக்கு செய்துள்ள காப்பீட்டு தொகையை பெறுவதற்கு பல்வேறு விதிமுறைகள் உள்ளன. இந்த விதிமுறைகள் எல்லாம் பெரும்பாலும் விவசாயிகளுக்கு எதிராகவே உள்ளது. அதனால் எப்படி காப்பீடு தொகை பெறுவது என விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

## மானிய விலையில் உளுந்து விதைகள்

புவனகிரி, : பரங்கிப்பேட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ரமேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், பரங்கிப்பேட்டை வட்டாரத்தில் நடப்பு தை பட்டத்தில் உளுந்து சாகுபடி மேற்கொள்ள சான்று பெற்ற விதைகள் மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஆடுதுறை 5, ஐபியு 94 ஆகிய உளுந்து ரக விதைகள் தேசிய உணவு பாதுகாப்பு திட்டம்(பயறு வகை), 2016-17ல் ஒரு கிலோவிற்கு ரூ.25 மானியத்தில் வழங்கப்படுகிறது. இதே திட்டத்தில் ஆடுதுறை 3 ரகத்திற்கு ஒரு கிலோவிற்கு ரூ.15 மானியம் அனுமதிக்கப்படுகிறது.

விதை கிராம திட்டம் 2016-17ன் கீழும் உளுந்து விதைகள் ஒரு கிலோவிற்கு ரூ.25 மானியத்தில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பரங்கிப்பேட்டை, பின்னத்தூர்,

சிதம்பரம் ஆகிய வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டு இவைகள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. விதைகள் தேவைப்படும் விவசாயிகள் தங்களது பகுதிகளில் உள்ள உதவி வேளாண்மை அலுவலர்களை அணுகி, மானிய விலையில் சான்று பெற்ற விதைகளை பெற்று பயனடையலாம்.

## வங்க கடல் பகுதியில் அந்தமான் அருகே புதிய காற்றழுத்த தாழ்வு நிலை



வங்க கடலில் அந்தமான் அருகே புதிதாக குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை உருவாகி இருக்கிறது.

### புயல் சேதம்

வங்க கடலில் உருவான வார்தா புயல் கடந்த 12-ந் தேதி சென்னையில் கரையை கடந்தது. அப்போது சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் சூறாவளி காற்றுடன் கனமழை பெய்தது. காற்றின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட மரங்களும், ஏராளமான மின் கம்பங்களும் சாய்ந்தன.

பெரும் சேதத்தை ஏற்படுத்திய வார்தா புயல் மேற்கு நோக்கி நகர்ந்து, படிப்படியாக வலு இழந்து குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையாக மாறி அரபிக்கடலில் லட்சத்தீவு பகுதியில் தற்போது நிலைகொண்டு உள்ளது.

**காற்றழுத்த தாழ்வு நிலை**

இந்த நிலையில், வங்க கடலில் மியான்மர் நாட்டின் தெனசெரிம் கடற்கரை மற்றும் தெற்கு அந்தமானையொட்டிய கடல் பகுதியில் புதிதாக ஒரு குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை உருவாகி இருக்கிறது.

இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியதாவது:-

கரையை கடந்த வார்தா புயல் வலு இழந்து லட்சத்தீவு மற்றும் அரபிக்கடல் பகுதியில் நிலைகொண்டு உள்ளது. தமிழகம் மற்றும் புதுச்சேரியில் சனிக்கிழமை (இன்று) ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்யும்.

**தமிழகத்தை நோக்கி நகருமா?**

இதற்கிடையே, வங்க கடலில் தெற்கு அந்தமானையொட்டிய பகுதியில் புதிதாக குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி இருக்கிறது. இது மிக மிக தொடக்க நிலைதான். இப்போது உள்ள நிலையை வைத்து அது எந்த திசையை நோக்கி நகரும் என்று கூற இயலாது.

மேலும் அரபிக்கடலில் உருவாகியுள்ள மேலடுக்கு சுழற்சி, குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையாக மாறி தமிழகத்தை நோக்கி வர வாய்ப்பு இல்லை.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

நேற்று காலை 8-30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தில் 3 செ.மீ. மழையும், மரக்காணம், மயிலத்தில் தலா 1 செ.மீ. மழையும் பெய்து உள்ளது.

## சேலம் மார்க்கெட்டில் 4 கிலோ சின்ன வெங்காயம் ரூ.50-க்கு விற்பனை



சேலம் மாநகரில் உள்ள உழவர் சந்தைகளிலும், இதர பகுதியில் செயல்பட்டு வரும் மார்க்கெட்டுகளிலும் கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக சின்ன வெங்காயம் மற்றும் பெரிய வெங்காயத்தின் விலை சரிந்து காணப்படுகிறது. சின்ன வெங்காயம் 1 கிலோ ரூ.15 முதல் ரூ.20 வரை தரம் வாரியாக விற்பனை செய்யப்பட்டு வந்தது. தொடர்ந்து சின்ன வெங்காயத்தின் வரத்து அதிகரிப்பு காரணமாக விலை மேலும் குறைந்து காணப்படுகிறது.

இந்தநிலையில், சேலம் செவ்வாய்பேட்டை பால் மார்க்கெட் பகுதியில் தற்போது 4 கிலோ சின்ன வெங்காயம் ரூ.50-க்கு விற்கப்படுகிறது. அதாவது ஒரு கிலோ சின்ன வெங்காயம் ரூ.12.50 வீதம் கணக்கிட்டு 4 கிலோ ரூ.50-க்கு விற்கப்படுவதால், அதை ஏராளமான பொதுமக்கள் தங்களது வீடுகளுக்கு வாங்கி செல்வதை காணமுடிகிறது. அதேபோல், பெரிய வெங்காயத்தின் விலையும் தொடர்ந்து சரிந்து வருகிறது.

இதனால் சின்ன வெங்காயம் மற்றும் பெரிய வெங்காயம் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

## தஞ்சையில் பலத்த மழை

தஞ்சையில் நேற்று பலத்த மழை பெய்தது.

வடகிழக்கு பருவமழை

தமிழகத்தில் இந்த ஆண்டு போதிய அளவு வடகிழக்கு பருவமழை பெய்யவில்லை. இருப்பினும் அவ்வப்போது லேசான மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் வார்தா புயல்காரணமாக பலத்த மழை பெய்தது. இதே போல் கடலோர மாவட்டங்களிலும் மழை பெய்தது.

ஆனால் தஞ்சை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பனிப்பொழிவு அதிகமாககாணப்படுகிறது. காலை 8 மணி வரை பனிப்பொழிவு காணப்படுகிறது. வாகனங்களும் காலை 8 மணி வரை முகப்பு விளக்கை எரியவிட்டபடி தான் சென்று வருகின்றன. இரவில் குளிரும், பகலில் வெயில் அடிப்பதுமாக உள்ளது. இதனால் மக்கள் கடும் அவதிக்குள்ளாகி வருகிறார்கள்.

பலத்த மழை

இந்த நிலையில் தஞ்சை மாவட்டத்தில் நேற்று காலை முதல் வெயில் காணப்பட்டது. இந்த நிலையில் மதியம் 2.30 மணி அளவில் திடீரென மழை பெய்யத்தொடங்கியது. லேசாக பெய்யத்தொடங்கிய மழை பின்னர் பலத்த மழையாக பெய்தது. இதனால் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஒடியது. தஞ்சை மேரீஸ்கார்னர் கீழ்பாலம், அண்ணாசிலை பகுதிகளில் மழைநீர் அதிக அளவில் தேங்கி காணப்பட்டது. தஞ்சை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் பரவலாக மழை பெய்ததது.

தினமலர்
உண்மையின் உரைகல்

## 4 நாட்களுக்கு பின் மீண்டும் கரும்பு அரவை

திருத்தணி: 'வர்தா' புயலால், திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலையில், நான்கு நாட்களாக நிறுத்தப்பட்டிருந்த கரும்பு அரவை, நேற்று மதியம் மீண்டும் துவங்கியது.

திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை, திருவாலங்காட்டில் இயங்கி வருகிறது. நடப்பாண்டிற்கான கரும்பு அரவையை, மாவட்ட ஆட்சியர் சுந்தரவல்லி கடந்த, 1ம் தேதி துவங்கி வைத்தார். ஆனால் சில மணி நேரத்தில் இயந்திரம் பழுது ஆனதால் அன்றே கரும்பு அரவை நிறுத்தப்பட்டது.

ஆலை நிர்வாகம் மேற்கொண்ட முயற்சியால், 9ம் தேதி காலை மீண்டும் கரும்பு அரவை துவங்கியது. இந்நிலையில், 12ம் தேதி வீசிய, 'வர்தா' புயலால், கூட்டுறவு சர்க்கரை ஆலை மேற்கூரையில் இருந்த, 500 இரும்பு தகடுகள் பறந்தன.

இதன் காரணமாக, கரும்பு அரவை செய்யும் மின்மோட்டார்கள் மழையில் நனைந்ததால், கரும்பு அரவை நிறுத்தப்பட்டது.

இதையடுத்து, மேற்கூரையின் இரும்பு தகடுகளை சீரமைத்து, மின்மோட்டார்களை ஆலை நிர்வாகம் பழுது பார்த்தது; நான்கு நாட்களுக்கு பின், நேற்று மதியம், நடப்பாண்டிற்கான கரும்பு அரவையை மீண்டும் துவக்கியது.

நடப்பாண்டில், 2.50 லட்சம் டன் கரும்பு அரவை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**கால்நடை இறப்பை இப்படி தவிர்க்கலாம்!**

பூக்கடைசத்திரம்: புயல் மற்றும் கனமழை காலங்களில் ஆடு, மாடுகளை பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை கால்நடை வளர்ப்போர் மேற்கொள்ள வேண்டும்' என, கால்நடை துறை அறிவுறுத்தியுள்ளது.

பாதிப்பு அதிகம்

**வலுத்த மழையிலும் வறண்டு கிடக்கும் ஏரிகள் எதிர்பார்ப்பு பொய்த்ததால் விவசாயிகள் கவலை**

திருத்தணி: 'வர்தா' மற்றும் 'நடா' புயலால், மாவட்டத்திற்கு போதிய மழை இல்லாத நிலையில், ஏரிகள் வறண்டு கிடப்பதால், விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர்.

திருத்தணி கோட்டத்தில், பொதுப்பணி துறை கீழ், 79 ஏரிகள் உள்ளன. இந்த ஏரிகள் மூலம், 25 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் விவசாயிகள் நெல், வேர்க்கடலை, கரும்பு மற்றும் காய்கறி தோட்டம் அமைத்து, விவசாயம் பார்த்து வருகின்றனர்.

விவசாயத்திற்கு தேவையான தண்ணீர், நடப்பாண்டில், தென் மேற்கு மற்றும் வட கிழக்கு பருவ மழையால் கிடைக்கவில்லை. 'நடா' மற்றும் 'வர்தா' புயலால், அதிகளவு மழை பெய்யும் என, எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், 20 செ.மீ., அளவே பெய்து விவசாயிகளை ஏமாற்றியுள்ளது.

திருத்தணி கோட்டத்தில், குறைந்த அளவு மழையும், அதிகளவு காற்றும் வீசியதால் மின்கம்பங்கள், மரங்கள் உடைந்து விழுந்தன. ஆனால், போதிய நீர் கிடைக்காமல் போனது.

மாவட்டத்தில் உள்ள ஏரிகளுக்கு குறைந்தளவு நீர் மட்டுமே சென்றதால், அவை வறண்டு கிடக்கின்றன. இதனால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

மேலும், பயிரிடுவதற்கு வழியில்லாமல் விவசாயிகள், கட்டட வேலைக்கு செல்ல வேண்டிய அவல நிலை உள்ளது.

இதுகுறித்து, பொதுப்பணித் துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், 'நடா புயலால், 11 செ.மீ., மழையும், 'வர்தா' புயலால், 10 செ.மீ., மழையும் மட்டுமே கிடைத்துள்ளது. மாவட்டத்திற்கு, 57.5 செ.மீ., மழை தேவை. குறைவான மழை பெய்துள்ளதால், விவசாயிகள் பயிர் செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. குறைந்த பட்சம், 40 செ.மீ., மழை பெய்திருந்தால் ஏரிக்கு, ஓரளவுக்கு தண்ணீர் வந்திருக்கும். இதனால் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக உயர்வதுடன், குடிநீர் தட்டுப்பாடு இருந்திருக்காது' என்றார்.

குறைந்த பட்சம், 40 செ.மீ.,மழை பெய்திருந்தால் ஏரிக்கு, ஓரளவுக்கு தண்ணீர் வந்திருக்கும். இதனால் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக உயர்வதுடன், குடிநீர் தட்டுப்பாடு இருந்திருக்காது

**பயிரிட்ட வாழை சேதமானதால் தானம் 'வர்தா' புயலால் விவசாயி விரக்தி**

ஆர்.கே.பேட்டை: புயலில் சாய்ந்த வாழை மரங்களால் விரக்தி அடைந்த விவசாயி, அதில் இருந்த தார்களை கிராமவாசிகள் இலவசமாக எடுத்துச் செல்ல அனுமதித்தார்.

வரலாற்றில் இடம் பிடித்த, 'வர்தா' புயல், விவசாயிகள் மனதில், நீங்காத வடுவை ஏற்படுத்திச் சென்றுள்ளது. கரும்பு, நெல், வாழை தோட்டங்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன. மேலும், மின்கம்பங்கள் உடைந்து கிடப்பதால், குடிநீர் வினியோகம் சீரடையாமல் உள்ளது.

கடந்தாண்டு டிச., மாத வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிவாசிகள், தற்போதைய சூறைக்காற்றால் நிலை குலைந்து போயுள்ளனர்.

ஆர்.கே.பேட்டை அடுத்த அத்திமாஞ்சேரிபேட்டை, பொதட்டூர்பேட்டை உள்ளிட்ட பகுதிகளில், வாழை தோட்டங்கள் அதிகளவில்

பயிரிடப்பட்டிருந்தன. ஓரிரு வாரங்களில் அறுவடைக்கு தயாராக இருந்த வாழை மரங்களை, 'வர்தா' புயல் நிர்மூலம் ஆக்கியது.

உடைந்து விழுந்த வாழை மரங்களில், தார்கள் சேதம் அடையவில்லை என்றாலும், முக்கால் பங்கு வளர்ச்சி மட்டுமே உள்ளதால், அவற்றுக்கு உரிய விலை கிடைக்காது.

**விற்பனை ஆகாத நிலை**

மேலும், ஏராளமான தோப்புகள் சேதம் அடைந்துள்ளதால், அவற்றை வாங்கவும் ஆளில்லை. இதனால், அவற்றை வெட்டி சந்தைக்கு கொண்டு சென்றாலும் விற்பனையாகாது போன்ற காரணங்களால், விவசாயிகள் சந்தைக்கு செல்ல தயாராக இல்லை.

பொதட்டூர்பேட்டை அடுத்த மேலபொதட்டூரை சேர்ந்த விவசாயி ஒருவர், புயலால் சாய்ந்த தனக்கு சொந்தமான வாழை தோப்பை, பகுதிவாசிகளுக்காக, திறந்து விட்டுள்ளார்.

நஷ்டத்தில் ஆறுதல்

வாழை தார், இலை, தண்டு என எதை வேண்டுமானாலும், எவ்வளவு வேண்டுமானாலும் வெட்டி எடுத்துச் செல்லுங்கள் என அனுமதி அளித்தார். இந்த தகவல் காட்டுத்தீயாக ஊருக்குள் பரவியது.

அடுத்த ஒரு மணி நேரத்தில், பெரியவர், சிறியவர் என களம் புகுந்தவர்கள், வாழை தார்களை வெட்டி எடுத்துச் சென்றனர்.

தான் நஷ்டம் அடைந்தாலும், பகுதிவாசிகள் உற்சாகமாக வாழை தார்களை வெட்டி எடுத்துச் சென்றதை கண்டு, விவசாயி ஆறுதல் அடைந்தார்.

**மாந்தோப்புகள் நாசம் விவசாயிகள் புலம்பல்**

உத்திரமேரூர்: உத்திரமேரூர் ஒன்றியத்தில், பல்வேறு பகுதிகளில் பயிரிடப்பட்டிருந்த மா பயிர்கள், 'வர்தா' புயலால் சேதமானதை அடுத்து, மா விவசாயிகள் நிவாரணம் கோரியுள்ளனர்.

உத்திரமேரூர் ஒன்றியம், பினாயூர், அருங்குன்றம், மணல்மேடு, புலிவாய், திருப்புலிவனம், வெங்கச்சேரி, பழவேரி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் விவசாயிகள் மாமரங்கள் பயிரிட்டுள்ளனர்.

கடந்த, 12ம் தேதி வீசிய வர்தா புயலால், இத்தோட்டங்களில் நூற்றுக்கணக்கான மா மரங்கள் வேரோடு சாய்ந்துள்ளது.

இதனால், கடந்த இருபது ஆண்டுகளுக்கும் மேலாக பராமரித்த மரங்கள் ஒரே நாளில் சாய்ந்ததால் தங்களுக்கான வாழ்வாதாரமே பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

தோட்டத்தில் இருந்த, 500 மாமரங்களில், 300 மரங்களுக்கு மேல் சாய்ந்து விட்டன. வெகு நாளான ஒட்டுமொத்த உழைப்பும், ஒரே நாளில் நாசமாகி விட்டதால், வேதனையில் உள்ளோம். எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டு, உரிய நிவாரணம் வழங்க வேண்டும்.

கே.கருணாகரன், பழவேரி

**பாழான பொன்னி விவசாயிகள் சோகம்**

சித்தாமூர்: செய்யூர் தாலுகாவில், சம்பா சாகுபடியை பாழாக்கிய, 'வர்தா' புயலால், விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

கிணற்று நீரில் சாகுபடி செய்துள்ள விவசாயிகள், கடன் பெற்று பொன்னி நெல் விவசாயம் செய்திருந்தனர். மற்ற நெல் பயிர்களை விட, பொன்னி அதிக உயரம் வளரக்கூடிய பயிராகும். கதிர் வரும் நிலையில் இருந்த பயிர்கள், தற்போது சாய்ந்துள்ளன.

இதனால், கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என, பகுதி விவசாயிகள் வருத்தம் தெரிவிக்கின்றனர்.

**விளைச்சல் குறைவால் அரிசி விலை உயர்வு! வெளி மாநிலத்திலிருந்து வரத்து குறைந்தது**

கடலூர்: பருவமழை பொய்த்ததால் நெல் விளைச்சல் கனிசமாக குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக அரிசி விலை கிடுகிடு வென உயர்ந்து வருகிறது.



தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை இந்த ஆண்டு தாமதமாக துவங்கியது. தென் மேற்கு பருவகாற்றின் மூலம் நமக்கு கிடைக்க வேண்டிய மழை போக்கு காட்டி நின்று போனது. தாமதமாக துவங்கிய பருவ காற்றால் வழக்கமாக பெய்ய வேண்டிய மழை பெய்யாமல் வெறும் துாரலோடு நின்று போனது. மழைக்காலமாக கருதப்படும் அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களில் மட்டும் நமக்கு கிடைக்க கூடிய 797.8 மி.மீ., மழைக்கு, இதுவரை 118.56 மி.மீ., மட்டுமே பெய்துள்ளது. அதாவது பெய்ய வேண்டிய மழையளவில் 6ல் ஒரு பங்கு மட்டுமே கிடைத்துள்ளது.

ஏற்கனவே காவிரி தண்ணீரை நம்பி காத்திருந்த விவசாயிகள் முழு பரப்பளவில் நடவு செய்யாமலேயே விட்டுவிட்டனர். நடவு செய்த விவசாயிகளும் போதியளவு தண்ணீர் இல்லாததால் காப்பாற்ற முடியாமல் தவித்து வருகின்றனர். இதனால் ஆண்டுதோறும் நமக்கு கிடைக்க கூடிய நெல் உற்பத்தியில் கனிசமான அளவு இந்த ஆண்டு குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.


அண்டை மாநிலமான கர்நாடகாவிலும் இந்த ஆண்டு நெல் உற்பத்தி குறைந்துள்ளதால் தமிழகத்திற்கு வரக்கூடிய அரிசி நின்று போய்விட்டது. அதே சமயம் ஆந்திரா, ஒரிசா, மேற்கு வங்கம் ஆகிய மாநிலத்தில் இருந்து அரிசி மூட்டைகள் தமிழகத்தில் விற்பனை செய்யப்படுகின்றன. போக்குவரத்து செலவு அதிகமாக இருப்பதால் அரிசி விலையை அதிகளவு குறைந்து விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இது ஒரு புறமிருக்க, தற்போது நெல் அறுவடை சரி வர நடைபெறாத நிலையில் உள்ளதாலும் அரிசி தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் கடலூர் மாவட்டத்தில் அரிசி விலை உயர்ந்து வருகிறது. சாப்பாட்டுக்காக பயன்படுத்தக் கூடிய நெல் வகைகளான பொன்னி ஒரு மூட்டை 1400 ரூபாயிலிருந்து 1600 ரூபாயாகவும், பி.பி.டி., 1350 ரூபாயிலிருந்து 1500 ரூபாயாகவும் உயர்ந்துள்ளது.

இதன்காரணமாக சாப்பாட்டு அரிசி சன்ன ரகம் பி.பி.டி., ஒரு கிலோ 40 ரூபாயிலிருந்து 45 ரூபாயாகவும், பொன்னி 42லிருந்து 50 ரூபாயகவும் உயர்ந்துள்ளது.

**வடகிழக்கு பருவமழை விவசாயிகளை... ஏமாற்றியது! நடா, வர்தா புயல்கள் வந்தும் மழை இல்லை**

கடலூர் : நடா புயலை தொடர்ந்து வர்தாவும் மழை பெய்யாமல் போக்கு காட்டியதால் கடலூர் மாவட்ட விவசாயிகள் ஏமாற்றம் அடைந்தனர்.

தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை இந்த ஆண்டு தாமதமாக துவங்கியது. தென் மேற்கு பருவகாற்றின் மூலம் கிடைக்க வேண்டிய மழை முற்றிலும் நின்று போனது. தாமதமாக துவங்கிய பருவ காற்றால் வழக்கமாக பெய்ய வேண்டிய மழை பெய்யாமல் வெறும் தூறல் மழையோடு முடித்துக்கொண்டது. மழைக்காலமாக கருதப்படும் அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களில் மட்டும் 797.8 மி.மீ., பெய்ய வேண்டிய மழை, இதுவரை 118.56 மி.மீ., மழை மட்டுமே பெய்துள்ளது.




காவிரி தண்ணீரை திறந்துவிட கர்நாடக அரசு கைவிரித்து விட்ட நிலையிலும், நடவு செய்துள்ள டெல்டா பகுதி விவசாயிகள் நிலத்தடி நீரை பயன்படுத்தி காப்பாற்றி வருகின்றனர். இந்த ஆண்டு குடிநீருக்கே திண்டாட்டமான சூழ்நிலை உருவாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த டிசம்பர் முதல் தேதி வங்கக் கடலில் உருவான நடா புயல் சின்னம் காரணமாக கடலூர் உட்பட 15 கடலோர மாவட்டங்களில் மழை பெய்யும் என அறிவிக்கப்பட்டது. ஆனால் நடா புயல் வலுவிழந்ததால் எதிர்பார்த்த மழையை கொடுக்காமல் போனது.

அதையடுத்து வர்தா புயல் மையம் கொண்டது. இந்த புயல் கொடும் புயலாக மாறியதால் கரையை நெருங்கும்போது கடலூர் மாவட்டம் உட்பட பல்வேறு மாவட்டங்களில் கனமழை பெய்யக் கூடும் என வானிலை மையம் எச்சரித்தது. அதையொட்டி கடலூர் துறைமுகத்தில் எச்சரிக்கை கூண்டு எண். 8 ஏற்றப்பட்டது.

ஆனால் அதன்படி நேற்று மதியம் புயல் கரையை கடக்கும்போது சென்னையில் மட்டுமே மழை பெய்தது.

கடலூர் மாவட்டம், கடலோர மாவட்டம் என்பதால் அதிகப்படியான மழை பெறும் பகுதியாக இருந்து வந்த நிலையில் இந்த ஆண்டு வடகிழக்குப் பருவமழையினால் 5 செ.மீ., மழைக்கு கூட வழியில்லாமல் போனது. வங்கக்கடலில் நடா, வர்தா ஆகிய புயல்கள்

வந்த போதிலும் கடலூர் மாவட்டத்தில் எதிர்பார்த்த மழையை கொடுக்காததால் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

**க.அலம்பளம் கிராமத்தில் கால்நடை மருத்துவ முகாம்**

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சி லயன்ஸ் சங்கம் மற்றும் கால்நடை மருத்துவமனை சார்பில் இலவச கால்நடை மருத்துவ சிகிச்சை முகாம் நடந்தது.

கள்ளக்குறிச்சி அடுத்த க.அலம்பளம் கிராமத்தில் நடந்த முகாமினை லயன்ஸ் சங்க முன்னாள் ஆளுநர் திருநாராயணன் துவக்கி வைத்தார். முகா மில், கால்நடை உதவி இயக்குனர் டாக்டர் குபேந்திரன் தலைமையில் ஆலத் தூர் கால்நடை உதவிமருத் துவர் கவியரசு, மருத்துவ உதவியாளர்கள் முனியாண்டி, முரளிகிருஷ்ணன், ஆய்வாளர்கள் அர்த்தநாரி, தேன்மொழி ஆகியோர் கொண்ட மருத்துவ குழுவினர் கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தனர்.

வட்டார வளர்ச்சி அதிகாரி கல்யாணசுந்தரம், லயன்ஸ் சங்க தலைவர் ராமகிருஷ்ணன் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஜோசப் ஒன்றிய மேற்பார்வையாளர் சுமதி, லயன்ஸ் முன்னாள் தலைவர் ராஜேந்திரன், உறுப்பினர்கள் தேவேந்திரன், செல்வராஜ், பொருளாளர் செந்தில் உட்பட பலர் பங்கேற்றனர்.

முகாமிற்கான ஏற்பாடுகளை ஊராட்சி ஒன்றிய செயலாளர் முருகேசன் செய்திருந்தார்.

**200க்கும் மேற்பட்ட கோழிகளுக்கு தடுப்பூசி: கால்நடை மருத்துவர் நியமிக்க வலியுறுத்தல்**

கொளத்தூர்: 'சத்யா நகர் கால்நடை மருந்தகத்தில், மருத்துவர் நியமிக்க வேண்டும்' என, கால்நடை வளர்ப்போர் வலியுறுத்தினர். சேலம், கொளத்தூர் ஒன்றியம், காவேரிபுரம் பஞ்சாயத்து, சத்யா நகரில், அரசு கால்நடை மருந்தகம் உள்ளது. அங்கு, மூன்று ஆண்டுகளாக கால்நடை

மருத்துவர் பணியிடம் காலியாக உள்ளது. இந்நிலையில், ஒரு வாரமாக காவேரிபுரம், மலையாள தெரு கிராமத்தில் வெள்ளை கழிச்சல் நோய் பரவி, 300க்கும் மேற்பட்ட கோழிகள் இறந்தன. தகவல் அறிந்த, கால்நடை மருத்துவ குழுவினர், கடந்த, 14ல் அந்த கிராமத்தில் முகாமிட்டு நோய் பாதித்த கோழிகளுக்கு சிகிச்சை அளித்தனர். இரண்டாம் நாளான நேற்று முன்தினம், அங்கு, சத்யா நகர் கால்நடை மருத்துவர் (பொறுப்பு) சுதா, மேட்டூர் கால்நடை மருத்துவமனை மருத்துவர் பொன்னுவேல் ஆகியோர், நோய் பரவாமல் இருக்க, 200க்கும் மேற்பட்ட கோழிகளுக்கு தடுப்பூசி போட்டனர். சத்யா நகர் கால்நடை மருந்தகத்தில் டாக்டர் பணியிடம் மூன்று ஆண்டாக காலியாக உள்ளது. இதனால், காவேரிபுரம் சுற்றுப்பகுதி கால்நடைகளுக்கு முறையான சிகிச்சை கிடைப்பதில்லை. காலியாக உள்ள டாக்டர் பணியிடத்தை உடனடியாக நிரப்ப வேண்டும் என, கால்நடை வளர்க்கும் விவசாயிகள் வலியுறுத்தினர்.

**வெற்றிலை விலை வீழ்ச்சியால் கவலை**

ப.வேலூர்: ப.வேலூர், ஏலச் சந்தையில் வெற்றிலையின் விலை சரிவடைந்தது. ப.வேலூரின், காவிரி கரையோரப் பகுதிகளான பாண்டமங்கலம், பொத்தனூர், ப.வேலூர், அனிச்சம்பாளையம், குப்புச்சிப்பாளையம், நன்செய் இடையாறு, பாலப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில், 1,000க்கும் மேற்பட்ட ஏக்கரில், வெற்றிலை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. அவை, ப.வேலூர் ஏல சந்தைகளுக்கு, விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. கடந்த வாரம் நடந்த ஏலத்தில், கற்பூரி வெற்றிலை, முதல் ரகம், 104 கவுளி கொண்ட சுமை ஒன்று, 4,500 ரூபாய், இரண்டாவது ரகம், 2,300 ரூபாய்க்கு ஏலம் போனது. வெள்ளைக்கொடி வெற்றிலை, முதல் ரகம், 4,500 ரூபாய், இரண்டாவது ரகம், 2,500 ரூபாய்க்கு விற்பனையானது. நேற்று நடந்த ஏலத்தில், கற்பூரி வெற்றிலை, முதல் ரகம், 4,000 ரூபாய், இரண்டாவது ரகம், 2,000 ரூபாய்க்கு ஏலம் போனது. வெள்ளைக்கொடி வெற்றிலை, முதல் ரகம், 4,000 ரூபாய், இரண்டாவது ரகம், 2,000 ரூபாய்க்கு ஏலம் போனது.

இதுகுறித்து, ப.வேலூர் விவசாயி திருநாவுக்கரசு கூறுகையில், "பண பரிமாற்றம் அதிகளவு இல்லாததால், எதிர்பார்த்த அளவு வியாபாரிகள் வரவில்லை. வரத்து அதிகமானதால், குறைந்த விலைக்கு ஏலம் போனது. விவசாயிகள் கவலையுடன் சென்றனர்," என்றார்.

**உலக நாடுகளில் உயர்ந்து நிற்கும் ஈரோடு மஞ்சள்: சத்தியமங்கலத்தில் அசந்த தாய்லாந்து விவசாயி**

சத்தியமங்கலம்: மஞ்சள் சாகுபடி குறித்து தெரிந்து கொள்ள, தாய்லாந்து நாட்டை சேர்ந்த விவசாயி, சத்தியமங்கலம் வந்து பார்வையிட்டார்.

உலகின் மொத்த மஞ்சள் உற்பத்தி, ஏற்றுமதியில், 60 சதவீத இடத்தை இந்தியா பிடித்துள்ளது. இந்தியாவுக்கு அடுத்தபடியாக பாகிஸ்தான், சீனா, பெரு, தைவான் நாடுகள் உள்ளன. இந்திய மஞ்சளில், குறிப்பாக தமிழகத்தில் விளையும் மஞ்சளுக்கு அதிக மவுசு உள்ளது. ஏனெனில் இதில் குர்குமின் என்ற வேதிப்பொருள் உள்ளது. இந்த ரக மஞ்சள், ஈரோடு, சேலம், திருப்பூர் மாவட்டங்களில் அதிகம் சாகுபடி செய்யப்படுகிறது. எனவே, இப்பகுதி மஞ்சளை வியாபாரிகள் அதிக அளவில் விரும்பி வாங்கிச் செல்கின்றனர். இதையறிந்த தாய்லாந்து நாட்டை சேர்ந்த விவசாயி ஷனான், ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலத்தை அடுத்த, செண்பகபுதூர் கிராமத்துக்கு வந்தார். அங்குள்ள விவசாயி ராமமூர்த்தி தோட்டத்தை பார்வையிட்டார். மஞ்சள் நடுவது, அறுவடை, தண்ணீர் பாய்சுவது, உரம் மற்றும் பூச்சிகொல்லி மருந்து தெளிக்கும் முறை உள்ளிட்ட அனைத்து விவசாய சாகுபடி முறைகளையும் கேட்டறிந்தார்.

இதுகுறித்து ஷனான் கூறியதாவது: இந்திய மஞ்சளுக்கு வெளிநாடுகளில், தனிச்சந்தை உள்ளது. அந்த வகையில் தரமான மஞ்சள் சாகுபடி குறித்து, அறிந்து கொள்ளவே தமிழகம் வந்தேன். இங்கு வந்த பிறகுதான் எவ்வளவு கடினமான சூழலில் விவசாயம் செய்கின்றனர் என்பது தெரிகிறது. தண்ணீரை, 1,000 அடிக்கு கீழிருந்து எடுத்து விவசாயம் செய்வது உண்மையிலேயே பிரமிக்க வைக்கிறது.

காரணம் எங்கள் நாட்டில், ஏழு மாதங்களுக்கு தொடர் மழை இருக்கும். எனவே, 25 அடி தோண்டினாலே தண்ணீர் வந்து விடும். மண்வளம், மழைவளம், மனிதவளம், நீர்வளம் இருந்தும், 10 டன்னுக்கு மேல் எங்களால் சாகுபடி செய்ய முடியவில்லை. தரமான, அதிக அளவு மஞ்சள் சாகுபடி குறித்து, அறிந்து கொண்டேன். இவ்வாறு அவர் கூறினார்.

**கண்மாய்களில் மணல் அள்ள விவசாயிகளுக்கு அனுமதி! முறைகேடு செய்தால் அபராதம் என அறிவிப்பு**

மதுரை : "மதுரை மாவட்டத்தில் பொதுப்பணித்துறை கண்மாய்களிலுள்ள வண்டல் மண் அள்ள விவசாயிகளுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. முறைகேடு செய்தால் அபராதம் விதிக்கப் படுவதுடன், வாகனங்களும் பறிமுதல் செய்யப்படும்," என, கலெக்டர் வீரராகவராவ் தெரிவித்தார்.

மதுரையில் நேற்று நடந்த விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் டி.ஆர்.ஓ., வேலுச்சாமி, வேளாண் இணை இயக்குனர் கனகராஜ், கலெக்டரின் நேர்முக உதவியாளர் ஸ்ரீதர், கூட்டுறவு இணை பதிவாளர் வெங்கடேசன், தோட்டக்கலை துணை இயக்குனர் பூபதி மற்றும் பலர் பங்கேற்றனர்.



**இதில் நடந்த விவாதங்கள் வருமாறு:**

தேவராஜ்: மாவட்டத்தில் விவசாயம், குடிநீருக்கு தண்ணீர் இல்லாத நிலையில் வைகை அணை பள்ளபுரத்தில் குடிநீர் வீணாகிறது. இதை ஆய்வு செய்ய வேண்டும்.

கலெக்டர்: குடிநீர் வீணாவதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அசோகன்: காட்டு பன்றிகளால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. பிராணிகள் வதை பட்டியலில் கன்று, மாடுகள் இடம் பெற்றுள்ளதால் ஜல்லிக்கட்டு நடத்த அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. கன்றுகள், மாடுகளை இறைச்சிக்காக கொல்கின்றனர். பயிர்களை சேதப்படுத்தும் பன்றிகளை கொல்ல அனுமதி வழங்க மறுக்கின்றனர்.

கோபாலகிருஷ்ணன்: விலங்குகளை சுட்டு கொல்ல அனுமதியளிக்கக்கூடாது. வனத்துறையினரே அதை விரட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதற்கு மற்ற விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்ததால் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது. கலெக்டர் சமாதானம் செய்ததையடுத்து விவாதம் தொடர்ந்தது.

மேலூர் விவசாயி: பெரியாறு, வைகை கடை மடை பகுதியான மேலூருக்கு தொடர்ந்து தண்ணீர் வருவதில்லை. விவசாயம் பொய்த்த நிலையில், பயிர்கடனுக்காக ஜப்தி நடவடிக்கை எடுக்கின்றனர்.

கணேசன்: சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் பாலிதீனை ஒழிக்க நடவடிக்கை எடுப்பது வரவேற்கத்தக்கது. இயற்கை வளப்பாதுகாப்பு, சீமை

கருவேல ஒழிப்பு இயக்கம் சார்பில் பொதுப்பணித்துறை கண்மாய்களிலுள்ள சீமை கருவேல மரங்களை எங்கள் சொந்த செலவில் அகற்ற விரும்புகிறோம். இதற்கு கலெக்டர்

அனுமதியளித்தாலும், மற்ற அதிகாரிகள் ஒத்துழைப்பு தரவில்லை. (பின் ஆயிரம் துணிப்பைகளையும் இலவசமாக வழங்கினார்).

கலெக்டர்: பொதுப்பணித்துறை, உள்ளாட்சி நிர்வாகங்களுடன் இணைந்து சீமை கருவேல மரங்கள் தொடர்ந்து அகற்றப்படுகின்றன. இதை உடனடியாக முடியும் காரியம் அல்ல. தன்னார்வ அமைப்புகள் முன்வந்தால், பொதுப்பணித் துறையினர், உள்ளாட்சி நிர்வாகத்தினர் தங்கள் கண்காணிப்பில் அகற்ற அனுமதியளிக்கலாம்.

பார்த்தசாரதி: மதுரைக்கு குடிநீர் ஆதாரமான மூல வைகையில் மரங்களை வெட்டி கடத்தி விட்டனர். இதகுறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கலெக்டர்: அந்த பகுதி தேனி மாவட்டத்தில் வருவதால், அந்த கலெக்டரிடம் தான் மனு கொடுக்கலாம்.

மயில்சாமி: மாடக்குளம் மதுரையின் முக்கிய நீர் ஆதாரமாக உள்ளது. அங்கு மண்டியிருந்த பெரும்பாலான சீமை கருவேல மரங்களை நாங்கள் அகற்றி விட்டோம்.

மீதமுள்ள கருவேல மரங்களையும் அகற்ற வேண்டும். மேலும் தனியார் நிர்வாகத்தினர் ஆழ்குழாய் அமைத்து தண்ணீர் எடுப்பதை தடுக்க வேண்டும்.

ராமன்: ரேஷன் கார்டுகளில் ஆதார் எண் இணைக்காத குடும்பங்களுக்கு உணவு பொருட்கள் வழங்க மறுக்கின்றனர்.

இதற்கான காலக்கெடுவை

நீட்டிக்க வேண்டும். பயிர்

காப்பீடு குறித்து விளக்க வேண்டும்.

பழனிச்சாமி: சிங்கம்புணரி கால்வாய் பத்தாண்டுகளாக தூர்வாரப்படவில்லை. இதனால் கடைமடை பகுதிக்கு தண்ணீர்

செல்வதில்லை. பட்டா மாறுதலுக்கு செல்லும் விவசாயி களிடம் மேலூர் தாலுகாவில் லஞ்சம் கேட்கின்றனர்.

கலெக்டர்: இதுகுறித்து மேலூர் தாலுகா அலுவலர்கள் விளக்கமளிக்க வேண்டும்.

மேலூர் தாலுகா அலுவலர்: லஞ்சம் கேட்ட ஊழியர்கள் குறித்து புகார் எதுவும் தாசில்தாருக்கு வரவில்லை.

பாண்டியன்: மழை பெய்யும் என விவசாயிகள் எதிர்பார்த்து நாற்று நட்டனர். அவையும் சேதமடைந்து விட்டன. ஆனால் காப்பீடு செய்ய மறுக்கின்றனர்.

வேளாண் இணை இயக்குனர்: பயிர் விதைக்க இயலாமை மற்றும் அறுவடைக்கு பின் நஷ்டஈடு போன்றவைகளுக்கு பயிர் காப்பீடு செய்யப்படுகிறது. இதற்காக விவசாயிகளிடம் பிரிமியம் பெறப்படுகிறது. ஏக்கருக்கு 4900 ரூபாய் வரை இழப்பீடு கிடைக்க வாய்ப்புள்ளது.

தனிக்கொடி, மணிகண்டன்: கண்மாய்களில் மணல் அள்ளுவதில் முறைகேடு நடக்கிறது. இதை தவிர்க்க விவசாயிகளுக்கு மணல் அள்ள அனுமதியளிக்க வேண்டும்.

கலெக்டர்: பொதுப்பணித்துறை கண்மாய்களில் விவசாயிகள் வண்டல் மண் அள்ள கனிம வளத்துறையினரிடம் விண்ணப்பித்தால் பத்து நாட்களில் அனுமதி வழங்கப்படும். அதை விவசாயத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். முறைகேடு செய்தால் வாகனங்களை பறிமுதல் செய்யப்படும். 25 ஆயிரம் ரூபாய் அபராதமும் வசூலிக்கப்படும். இவ்வாறு விவாதம் நடந்தது.

**தேனீ வளர்ப்பு கருத்தரங்கு**

கன்னிவாடி : தருமத்துப்பட்டி அருகே பழனியூரில், பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி மாணவர்கள் சார்பில் ஒருங்கிணைந்த பூச்சி

மேலாண்மை, தேனீ வளர்ப்பு குறித்த கருத்தரங்கம் நடந்தது. கல்லுாரி பூச்சியியல் துறை உதவிப்பேராசிரியர் இருளாண்டி முன்னிலை வகித்தார். ரெட்டியார்சத்திரம் மாணவர்குழு தலைவர் நந்தகுமார் வரவேற்றார்.பயிர் சாகுபடியில் ஒருங்கிணைந்த பாதுகாப்பு முறைகள், பூச்சி தாக்குதல் வழிகள், கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள், குறைந்த முதலீட்டில் தேனீ வளர்ப்பு முறை குறித்து விளக்கப்பட்டது.

**சின்னமனுாரில் செங்கரும்பு அறுவடை துவக்கம்! மகிழ்ச்சியில் விவசாயிகள்**

சின்னமனுார் : சின்னமனுாரில் செங்கரும்பு அறுவடை செய்யும் பணி துவங்கி உள்ளது. பொங்கல் விற்பனைக்காக முன்கூட்டியே 'புக்கிங்' செய்யப்படுவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

சின்னமனுார் பகுதியில் 500 ஏக்கருக்கு மேல் செங்கரும்பு சாகுபடி நடக்கிறது. இங்கு விளையும் செங்கரும்புக்கு பன்றி கழிவை உரமாக பயன்படுத்துவதில்லை. ருசிமிகுதியால் தமிழகம் மற்றும் கேரளாவைச்சேர்ந்த மொத்த வியாபாரிகள் போட்டி போட்டு வாங்கி செல்வர். சபரிமலையில் மண்டல பூஜை சீசன் நடப்பதால் கரும்புக்கு நல்ல 'கிராக்கி' ஏற்பட்டுள்ளது.

ஒரு கட்டு(10 கரும்பு) ரூ.400க்கு மேல் விற்பனையாகிறது. வெளி மாவட்டங்களில் இருந்து வரும் ஐயப்ப பக்தர்கள் கரும்பு கட்டுகளை வாங்கி செல்கின்றனர். அறுவடையின் துவக்கத்திலேயே நல்ல விலை கிடைப்பதால் மேலும் விலை அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

விவசாயிகள் கூறுகையில், 'சில இடங்களில் அறுவடை துவங்கிய நிலையில், சின்ன வாய்க்கால் பரவில் அறுவடைக்கு தயாராக உள்ள செங்கரும்பில் சோகை உறிக்கும் பணி மும்முரமாக நடக்கிறது. பருவமழை ஏமாற்றியதால் கரும்பு விளைச்சல் பாதிக்குமோ என்ற

அச்சம் இருந்தது. அவ்வப்போது கிடைத்த மழையால் திரட்சியாக கரும்பு விளைந்துள்ளது.

வெளிமாவட்ட மொத்த வியாபாரிகள் முன்கூட்டியே 'ஆர்டர்' கொடுக்கின்றனர். வழக்கமாக அறுவடையின் துவக்கத்தில் குறைந்த விலை நிர்ணயிக்கப்படும்.

பொங்கல் பண்டிகையின் போது 'டிமாண்ட்'டிற்கு ஏற்ப விலையில் ஏற்ற, இறக்கம் இருக்கும். இந்தாண்டு அறுவடை துவங்கிய நிலையில் ஒரு கரும்பு ரூ.40க்கு மேல் விற்பதால், ஜனவரி முதல் வாரத்தில் மேலும் விலை அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது. நல்ல விலை விற்பதால் கரும்பு விவசாயிகளுக்கு இம்முறை 'ஜாக்பாட்' வருவாய் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம்,' என்றனர்.

**நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி**

தேனி: தேனி சார்நிலை கருவூலம் எதிரே உள்ள கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைகழகத்திற்கு உட்பட்ட உழவர் பயிற்சி மையத்தில் டிச., 20,21ம்தேதிகளில், நாட்டுக்கோழி வளர்ப்பு இலவச பயிற்சி நடைபெற உள்ளது. பங்கேற்க விரும்புவோர் 94431 08832, 99620 75873 என்ற அலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ளலாம், என, உழவர் பயிற்சி மைய தலைவர் முருகேசன் தெரிவித்துள்ளார்.